Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:–71/2021 Date:– 23.09.2025

Deposition of witness for prosecution :– PW :–1

| | | | |
|---|---|---|---|
| Name | காளிமுத்து | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:–**

1. நான் தற்போது செம்படாபாளையத்தில் வசித்து மீன் பிடிக்கும் வேலை செய்து வருகிறேன். 2019ம் ஆண்டு செம்படாபாளையத்திலுள்ள காளியம்மன் கோயிலுள்ள சாமி அரைப் பவுன் மாங்கல்யம் திருடுபோய்விட்டது. எங்கள் ஊரைச் சேர்ந்த வெள்ளியங்கிரி என்பவர் கோயிலில் சென்று பார்த்தபோது சாமி மாங்கல்யம் திருடுபோனது தெரியவந்தது. அவர் எனக்கு போன் மூலமாக சாமி நகை திருடுபோனது சம்மந்தமாகக் கூறினார்.

2. நான் இது சம்மந்தமாக சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் மனு **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2 மாதம் கழித்து காணாமல் போன நகை கிடைத்துவிட்டது. மேற்படி நகையை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். மேற்படி நகையை யார் திருடினார்கள் என்று தெரியாது. 4 கிராம் எடையுள்ள தங்க மாங்கல்யம் **அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:–**

1. புகார் மனுவிலுள்ள விபரம் எனக்குத் தெரியாது. போலீசார்தான் எழுதினார்கள். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. புகாரை வெள்ளியங்கிரி கொடுக்காமல் நான் ஏன் கொடுத்தேன் என்றால் நான் கோயில் தர்மகத்தாவாக இருந்ததால் கொடுத்தேன். நகை காணாமல்போனதாக சொல்லப்படும் தகவல் வெள்ளியங்கிரி என்பவர் கூறிதான் எனக்குத் தெரியும். நான் அந்த சமயத்தில் ஊரில் இல்லை. புகாரை நான் மதிய வேளையில் கொடுத்தேன்.

2. நான் புகார் கொடுத்தவுடன் போலீசார் கோயிலுக்கு வந்துவிட்டார்கள். இன்ஸ்பெக்டர் வந்தாரா என்றால் வந்தார். போலீசார் அங்கு வந்து போட்டோ எடுத்துச் சென்றார்கள். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:-71/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-2

| Name | ஆனந்தன் | Age | |
|---|---|---|---|
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது செம்படாபாளையத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 2019-ம் ஆண்டு செம்படாபாளையத்திலுள்ள காளியம்மன் கோயிலுள்ள சாமியின் தாலி மற்றும் வெள்ளிப் பதக்கம் ஆகியவை காணாமல்போய்விட்டது. மேற்படி நகை காணாமல்போனது சம்மந்தமாக வெள்ளியங்கிரி என்பவர் கூறி தெரியும். இது சம்மந்தமாக சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 2 மாதம் கழித்து காணாமல் போன நகை கிடைத்துவிட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு சாமி கழுத்தில் நகை இருந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல இருந்தது. நான் வழக்கு சம்பவத்திற்கு முந்தைய நாள் மாலை 04.00 மணிக்கு சாமி கழுத்தில் தாலியைப் பார்த்தேன். மேற்படி விபரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறினேன். நான் சாமி கழுத்தில் நகையைப் பார்த்தாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காணாமல்போனதாக கூறும் நகையை யார் எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:–71/2021 Date:– 23.09.2025

Deposition of witness for prosecution :– PW :–3

| | | | |
|---|---|---|---|
| Name | சென்னியப்பன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை:–</u>**

1. நான் தற்போது செம்படாபாளையத்தில் வசித்து மீன் பிடிக்கும் வேலை செய்து வருகிறேன். 2019–ம் ஆண்டு செம்படாபாளையத்திலுள்ள காளியம்மன் கோயிலுள்ள சாமியின் மாங்கல்யம் காணாமல்போய்விட்டது. மேற்படி நகை காணாமல்போனது சம்மந்தமாக வெள்ளியங்கிரி என்பவர் கூறி தெரியும். இது சம்மந்தமாக சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 2 மாதம் கழித்து காணாமல் போன நகை கிடைத்துவிட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

1. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். வெள்ளியங்கிரி கூறிதான் தெரியும். வெள்ளியங்கிரி கோயில் கதவு உடைந்து கிடைந்ததாகத்தான் கூறினார். வெள்ளியங்கிரி கூறும்போது நான் எனது வீட்டிலிருந்தேன். கோயிலுக்கும் எனது வீட்டிற்கும் சிறிது தூரம் இருக்கும். வெள்ளியங்கிரி கூறி அரைமணி நேரம் கழித்து நான் கோயிலுக்குச் சென்றேன். சம்பவம் நடந்ததாக வெள்ளியிங்கிரி எனக்கு காலை 05.00 மணிக்கு போன் மூலமாகக் கூறினார்.

2. போலீசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நகையை யார் எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. காளியம்மன் கோயில் என்பது பங்காளிகள் கோயிலாகும். இதற்கு முன்பு சாட்சியமளித்தவர்கள் என்னுடைய உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1 கேட்டுக்கொண்டதால் நாங்கள் காவல் நிலையம் சென்றோம்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:-71/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-4

| | | | |
|---|---|---|---|
| Name | வெள்ளியங்கிரி | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை:-</u>**

1. நான் தற்போது செம்படாபாளையத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 2019-ம் ஆண்டு காலை 05.00 மணிக்கு நான் காட்டிற்கு செல்லும்போது காளியம்மன் கோயில் நடை திருந்திருந்தது. நான் இது சம்மந்தமாக காளிமுத்து, ஆனந்தன், சென்னியப்பன், ரமேஷ் ஆகியோருக்குத் தெரிவித்தேன்.

2. சாமி கழுத்திலிருந்த 4 கிராம் தாலி காணாமல்போயிருந்தது. இது சம்மந்தமாக அனைவரும் சேர்ந்து சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 2 மாதம் கழித்து காணாமல் போன நகை கிடைத்துவிட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

1. கோயில் எப்போது பூட்டியிருக்குமா, திறந்திருக்குமா என்றால் பூட்டியிருக்கும், கோயிலின் சாவி அ.சா.1யிடம் இருக்கும். கோயிலுக்கு வெள்ளிக்கிழமை மற்றும் அம்மாவாசை தினங்களில் பூஜை செய்வோம். சம்பவம் நடந்ததாக கூறும் நாள் என்ன கிழமை என்று என்னால் கூற இயலாது.

2. பூஜை செய்வதற்காக 4 மணிக்கே கோயிலைத் திறந்துவிடுவோம். சாவியை அ.சா.1 தர்மகத்தா கொண்டு வருவார். என்னுடைய வீட்டிற்கும் கோயிலுக்கும் 300 அடி தூரம் இருக்கும். நான்தான் கோயில் திறந்திருந்தது குறித்துக் கூறினேன்.

3. மாங்கல்யம் காணாமல்போனது குறித்து கோயிலில் வைத்து என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையின்போது மாங்கல்யம் வாங்கியதற்கான பில் எதுவும் கொடுக்கவில்லை. போலீசார் காலை 07.30 லிருந்து 08.00 மணிக்குள் விசாரித்தார்கள்.

4. நகையை யார் எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. இதற்கு முன்பு மேற்படி கோயிலில் எவ்விதத் திருட்டும் நடைபெறவில்லை. கோயில் ஊருக்கு நடுவில் உள்ளது. அதைச் சுற்றி குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் எவ்விதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:-71/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-5

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது செம்படாபாளையத்தில் வசித்து தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்தக் கையெழுத்து **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்தக் கையெழுத்தை நான் 2019ம் ஆண்டு செம்படாபாளையத்திலிருந்த காளியம்மன் கோயிலில் நகை திருட்டுப் போனதற்காக போலீசார் வந்து விசாரித்து படம் வரைந்துகொண்டார்கள். அதில் நானும், ரவி என்பவரும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். நகை திருடுபோனதாக சம்மந்தமாக போலீசார் விசாரித்து மேப் போட்டார்கள் அதற்காக கையெழுத்து போட்டேன். போலீசார் மாலை 04.00 மணிக்கு வந்து கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். மேற்படி சம்பவம் நடந்தபோது நான் தனியார் பள்ளியில் ஆசிரியாராக பணியாற்றி வந்தேன்.

2. நீதிமன்றத்தில் கூறியவாறுதான் நான் கையெழுத்துப் போட்ட பேப்பரில் இருந்தது. சம்பவ இடத்தை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்றால் வெள்ளியங்கிரி என்பவர் அடையாளம் காண்பித்தார். நான் மேற்படி கோயிலின் பங்காளி ஆவேன். மேற்படி கோயிலானது எங்களது சொந்தக் கோயிலாக இருப்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:–71/2021 Date:– 23.09.2025

Deposition of witness for prosecution :– PW :–6

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரசேகரன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை:–</u>**

1. நான் தற்போது ராமாபுரத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. கோயில் நகை திருடுபோனது சம்மந்தமாக காவல்துறை உதவி ஆய்வாளர் விசாரித்தார்கள். ஒரு கையெழுத்தை ஸ்டேசனில் வைத்து எதிரியைப் பிடித்த பின்பு கையெழுத்து செய்தேன். மற்றொரு கையெழுத்தை புகார் மனு அளித்த பின்பு போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

1. கடந்த 19.12.2019-ம் தேதியன்று எதிரியை போலீசார் நீதிமன்ற உத்தரவுப்படி போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்கும்போது எனக்கு தகவல் சொல்லி வரச்சொன்னார்கள் என்றும், போலீசார் விசாரணையில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் நானும் மணி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். அதே தேதியன்று தொட்டம்பாளையத்திலுள்ள எதிரியின் பழைய வீட்டின் பக்கமுள்ள முற்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த தங்க மாங்கல்யத்தை என் முன்னிலையிலும் சாட்சி மணி முன்னிலையிலும் போலீசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு முதல்நிலை சாட்சியத்தில் அதுகுறித்து எதுவும் கூறாமல் இருக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்தை நான் காவ்ல நிலையத்தில் வைத்துப் போட்டேன். நான் குறுக்கு விசாரணையில் கூறியுள்ள விபரங்களை முதல்நிலை விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் போலீசார் கூறிதான் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.